# تنوير الابصار في تقبيل المزار

# இறைநேசர்களின் கப்றுகளை முத்தமிடலாமா?

தமிழாக்கம்

பஸீலதுஷ் ஷெய்க் சையித் அப்துல் அஸீஸ் மௌலானா
குஷ்ஹாலி அய்யதஹுமுல்லாஹுல் அஸீஸ்.

நூலின் பெயர் :- இறைநேசர்களின் கப்றுகளை முத்தமிடலாமா?

அரபி மூல நூல் ஆசிரியர் :- ஆலிமுல் பாஸில் ஷெய்குல் இஸ்லாம் ஹஸ்ரத் அல்லாமா கமறுத்தீன் சியால்வி ரஹ்மதுல்லாஹி அலைஹி

தமிழாக்கம் :- அப்ஸலுல் உலமா ஹாபிஸ் சையித் அப்துல் அஸீஸ் மௌலானா (குஷ்ஹாலி)

பக்கம் :- 28

வெளியீடு :- ஜம்ஈய்யத் இஷாஅத் அஹ்லுஸ்ஸுன்னாஹ்
2ம் குறுக்குத் தெரு, 105, கொழும்பு - 11

தொடர் இலக்கம் :- 08

முதற்பதிப்பு :- ஏப்ரல் 1997
துல்கஅதா 1417

அச்சிட்டோர் :- Rainbow Printers
Chennai - 600034.

# முன்னுரை

بسم الله الرحمن الرحيم

نحمده ونصلي على رسوله الكريم

உலகில் அல்லாஹுத்த ஆலா படைத்த ஒவ்வொரு படைப்பினங்களுக்கும் அதன் தன்மையைக் கொண்டு அதற்கென ஓர் அந்தஸ்த்தை வழங்கியுள்ளான். இப்படைப்பினங்களில் ஆக உயர்ந்த கண்ணியத்தை – மதிப்பை எல்லாம் வல்ல நாயனான அல்லாஹ் மனித குலத்திற்கு வழங்கியுள்ளான். இந்த மனித சமுதாயம் தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் கண்ணியத்தையும் கௌரவத்தையும், அடைந்துகொள்ளும் முறையையும், அதனை பெற்றுக் கொண்ட பின்னர் அதை பாதுகாக்கும் வழிமுறைகளையும், படைத்த அருளாலன் இம்மனித சமுதாயத்திற்கு பிரகாசமான நூர் எனும் ஒளியைக் கொண்டு நேர்வழி காட்டியுள்ளான். இந்த நூர் எனும் ஒளி யாருடையதாக இருக்கும் என வினவும் போதுஇந்த வினாவை எந்தவொரு சந்தேகமுமில்லாத திருமறையாம் அல்குர்ஆனிடம் வினவுவோம்.

نور و كتاب مبين

அந்த கருணைக்கடல் முஸ்தபா ﷺ அவர்கள் இருள் நீக்கிடும் மாபெரும் ஒளி ஜோதியாகும். இன்னும் அவர்களுக்கு இறக்கப்பட்ட வேதம் எவ்வித சந்தேகமு மற்றதாகும்.

இந்த திருமறை வசனத்திலிருந்து தெளிவாகி விட்டது. அந்த நூர்எனும் ஜோதி எவர்களுக்காக இவ்வுலகை வர்ணிக்கப்பட்டதோ அந்த அருள் ஜோதி எம் கண்மனியாம் அஹ்மதே முஜ்தபா,முஹம்மதே முஸ்தபா ﷺ அவர்களாவர்கள். இவர்களின் ஜோதியைச் சுமர்ந்தவர்களாகவே அல்லாஹ்வின் பிரதிநிதிகளாக வந்த நபிமார்களும், நல்லடியார்களும் ஆவார்கள்.

இவ்விசயத்தை விளக்கும் முகமாக திருமறை பின்வருமாறு எடுத்தியம்புகின்றது. وتقربك في الساجدين



Ashaabulbadhr Media unit kalmunai

என விளங்குகின்றது. இந்த வினாவை அந்த அருள் ஜோதியிடமே வினவிப் பார்ப்போம். திரு நபியின் ஸஹாபாக்களில்ஒருவர் வினவினார். யா ரசூலல்லாஹ் ﷺ இறைவன் படைப் பினங்களில் முதன் முதலில் எதைப் படைத்தான் என்று, அதற்கு திருநபி ﷺ அவர்கள் விடை பகர்கையில் ஸஃதே! முதன் முதலாக உமது நபியின் நூரை அதாவது ஜோதியைப் படைத்தான்.அச்சமயம் சூரியனோ, சந்திரனோ, அர்ஷோ குர்ஷோ கிடையாது என திருவாய் மொழிந்தார்கள்.

(ஆதாரம், ஷிபா அல்ஷரீப்)

ஆக அல்குர்ஆனுடைய வசனத்தையும், இந்த திருநபி ﷺ அவர்களின்அருள் மொழியையும் ஒப்பித்து பார்க்கயில் அந்த நூர் எனும் ஜோதி எம் பெருமான் முஹம்மது முஸ்தா அஹ்மதே முஜ்தபாதான் என்பது தெளிவாகிறது.

உலக மனித சமுதாயம் யாவரும் இவர்களின் ஒளியைக் கொண்டே ஹிதாயத் எனும் நேர்வழியை அடைகின்றனர். இவர்களின் வெளிசத்தின், நல்வழியை விட்டுவிட்டு எவனொருவன் நேர்வழியை தேடுவானோ அவனை விட இவ்வுலகில் மாபெரும் நஷ்டவாலியையும், மடையனையும் நீங்கள் காணமாட்டீர்கள். இப்படி இருக்கயில் எவனொருவன் இப்பெருமைக்கும் கண்ணியத்திற்கும் கதாபாத்திரமான நாயகம் அவர்களின் கண்ணியத்திற்கும்,கௌரவத்திற்கும் அணுவலவேனும் தரக்குறைச்சலாக, தரம்குறைத்து பேசுபவனின் முடிவு என்னவாகும் என்பதை நீங்கள் சற்றுசிந்தித்துப் பாருங்கள்.

இப்பதினாறாம் நூற்றாண்டில் இப்படியும் ஓர் வழிகட்ட கூட்டத்தார் தன்னை தௌஹீதியர்கள் எனப் பிரகடணப்படுத்திக் கொண்டு பாமர மக்களை வழிகெடுத்துக் கொண்டிருப்பதை காண முடிகின்றது. அல்லாஹ் நம்மனைவரையும் இப்படிப் பட்ட வழிகெட்ட கூட்டத்தில் நின்றும் பாதுகாப்பானாக ஆமீன், ஆமீன்,யாறப்பல் ஆலமீன்

இவ்விதமாக தன்னைத் தானே தௌஹீதியர்கள் என மார்பு தட்டிப்பேசும் இவ்வழிகெட்டோர் நபிமார்கள், ஸாலிஹீன்களின் கபுருகளை முத்தமிடுவதையும், அப்புண்ணியவாங்களின் புனித ஸ்த்தலங்களை கண்ணியப்படுத்துவதையும் கௌரவிப்பதையும் ஹராம் என்றும் ஷிர்க் எனவும் கூறுவது வியப்பிலும் வியப்பே! இவர்களோ இதற்கென



முஷ்ரிகீன்கள் சம்பந்தமாக இறக்கப்பட்ட இறை அத்தியாங் களை தாங்கள் கூறும் கூற்றுக்கு ஆதாரமாய் எடுத்தியம்புவது மாபெரும் மடமையிலும் மடமையே! ஆனால் இருலோகத்திற்கும் தலைவராக வந்துதித்த எம்பெருமானார் . ﷺ. அவர்களின் நற்குண நடைமுறை வழிகள் உலக சமுதாயத்திற்கு மிஃராஜை அடைந்திடும் நல்முறையாகும். இதே போன்றே திருநபி அவர்களின் திருத் தோழர்களின் வாழ்முறை இவர்களின் நடைமுறையாவும் உலக மாந்தர்களில் நபிமார்களுக்கு அடுத்தவர்களாக இவர்களே திகழ்ந்தார்கள். இப்பூமிலகமும் இப்படிப் பட்டோர்களை சுமந்திருப்பதை தன் பாக்கியம் எனகருதுகின்றது. மேலும் ஹிதாயத் எனும் வானத்தின் மின்னி பிரகாசமளிக்கும் இந்த வான் நட்சத்திரங்களை ஹிதாயத் எனும் ஜோதியின் மண்டபத்திலிருந்து பெற்றுக் கொண்ட அக்லாக் எனும் நற்குணங்களின் பிரகாசத்தை தன்னுல் அடக்கி இம்மானிடர்களில்உயர்ந்த இடத்தை அடைந்தார்கள். இந்த நட்சத்திரங்களை வர்ணிக்கையில். اصحابي كالنجوم بايهم اقتديتم اهتديتم

என் தோழர்கள் வானத்தில் மின்னும் நட்சத்திரங்களைப் போன்றவர்கள், அவர்களில் எவரைப் பின்பற்றினாலும் ஹிதாயத் எனும் நேர்வழியடைவீர்கள்.

ஆகையால் இந்த விஷயத்தில் நபிமணித் தோழர்களை கவனிப்போம். இவர்களின் காலத்தில் ஸாலிஹீன்களின் அடையாளச் சின்னங்களுக்கு என்ன அந்தஸ்து கொடுக்கப்பட்டிருந்தது, அவர்கள் நாம் கூறப்போகும் விடையங்களை ஆகுமானதெனக்கருதினார்களா? அல்லது இதற்கு மறுப்புத் தெரிவித்தார்களா என்பதைக் கவனிப்போம்.

(1) ஹஸ்ரத் சபியா (றலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத் செய்யப்படுகின்றது. சொன்னார்கள் புனித மக்கா முகர்ரமாவில் நபி/ﷺ அவர்களின் முஅத்தினாக கடமை புரிந்த ஹஸ்ரத் அபூமஹ்தூறா அவர்களின் தலைமுடியின் முற்பகுதி அதை அவிழ்த்திடுவார்களானால் பூமியைத் தொடுமளவு மிக நீண்டிருந்ததது. இதனைக்கண்ணுற்ற சிலர் அவர்களிடம் முடியை நீங்கள் இவ்விதமாகவைக்கக் காரணம் என்ன என்று வினவப்பட்டபோது

لم اكن بالذي احلقها وقد مسها رسول



JMHAC - KALMUNAI

صلى الله عليه وسلم بيده المباركة (شفاء
شريف ج٢ص٤٤)

அண்ணல் நபி ﷺ அவர்கள் தனது முபாரகான அருள்மிகு கரத்தால்தடவியதன் காரணமே எனப் பதிலுரைத்தார் அன்நபித் தோழர்.

(2) சையிதுனா ஹஸ்ரத் அனஸ் ؓ அவர்களிடம் அண்ணலார் அவர்களுக்கு தண்ணீர் அருந்தக் கொடுத்த பலகையினாற் செய்யப்பட்ட ஓர் பாத்திரமிருந்தது. அதன் கைபிடியோ இரும்பால் செய்யப் பட்டிருந்தது. ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அக்கைபிடியை மாற்றியமைக்க முனைந்தபோது ஹஸ்ரத் தல்ஹா ؓ அதனை நபிகளார் ﷺ தன் அருள் மிகுகரத்தால் பிடித்தமையால் அவ்விதம் செய்வதை தடுத்தார்கள்.

(3) ஹஸ்ரத் சஹ்ல் ؓ அவர்கள் எப்பாத்திரத்தால் அண்ணல் ﷺ அவர்களுக்கு தண்ணீர் பருகக் கொடுத்தார்களோ அப்பாத்திரத்தைக் கொண்டு பறகத் அருளை நாடி ஸஹாபாக்கள் தண்ணீர்பருகினார்கள் அப்பாத்திரத்திற்கிருந்த உயர் தன்மையால் ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் அதனைத் தன்வசம் பாதுகாப்பாக வைத்துக் கொண்டார்கள்.

(புகாரி ஷரீப்,பாகம் 2 பக்கம் – 842)

(4) எந்த சாய்மான பலகை மீது அமர்ந்தவர்களாக கருணைக் கடல் ﷺ அவர்கள் இவ்வுலகை விட்டும் தன் திரு வதனத்தை மறைத்துக் கொண்டார்களோ, அப்பலகை மீதே ஹஸ்ரத் ஸித்தீக்குல் அக்பரையும், ஹஸ்ரத் உமர்பாறூக்கையும் வைக்கப்பட்டது. இப்பலகை பழமையடைந்த போது அண்ணலாரின் திரு மேனியைச் சுமக்கும் பாக்கியம் பெற்றமையால் நான்காயிரம் திர்கத்திற்கு ஹதியா செய்யப்பட்டது.

(இப்னு மாஜா, பாகம் 3, பக்கம் 282)

(5) ஷாம் நாட்டிலிருந்து ஹஸ்ரத் பிலால் ؓ அவர்கள் மதீனாமுனவ்வறாவுக்கு சமுகம் கொடுத்தபோது கவலை தாங்காது அண்ணல் நபி அவர்களின் புனித ரௌழா ஷரீபை கட்டிப்பிடித்து பீறிட்டு அழுதார்கள். உருண்டு பிரன்டார்கள். இவ்வாறு செய்தமையால் அந்த நபிகளாரின் ரௌழாவுடைய மண் பிலால் அவர்களின் முகத்தை மாற்றமடையச் செய்திட்டது. அதுவும்மண்தான். ஆனால் அம்மண்ணில் கருணைக் கடல் ﷺ வாழ்கின்றதால் தன் முகத்தை உருட்டிப் பிரட்டினார்கள்.

(புகாரி ஷரீப் பாகம் 2பக்கம் 958)



(6) ஹஸ்ரத் இப்னு உமர் நபிகளார் ﷺ அவர்களின் மின்பரின் இருப்பிடமீது தன் கரத்தைக் கொண்டு தடவி தனது முகத்தில்பூசிக் கொள்வராயிருந்தார்.

(ஷிபாய் ஷரீப் பாகம் 2, பக்கம் 43)

(7) ஹஸ்ரத் முல்லா அலி காரி ؓ. அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் அமீர் முஆவியா ؓ அவர்களிடம் திருநபி ﷺ அவர்கள் அணிந்திருந்த ஜுப்பாவும், போர்வையும் மேலும் அந்த கோமானின் ஓர் சில முபாரக்கான முடிகளும், நகங்களும் இருந்தன. சையிதுனா முஆவியா ؓ அவர்கள் இவ்வுலகை விட்டு பிரியும் தறுவாயில் பின்வருமாறு வஸிய்யத் செய்தார்கள்.

كفنوني في قميصه وادرجوني في ردائه
وازروني بازاره واحشوامنحري وشدقي
ومواضع السجودمني بشعره وظفره وخلوا
بيني وبين ارحم الراحمين(مرقاة شرح مشكوة
ج٥ص٦٣٨)

என்னை திருநபி ﷺ அவர்களின் ஜுப்பாவைக் கொண்டு கபன்செய்யுங்கள். அவர்களின் போர்வையை அணிவியுங்கள். அன்னாரின் கீழ் அணியை என் கீழ் அணியாக்குங்கள். என் சுஜூதுடையஇடங்களை அன்னாரின் முபாரகான முடி, நகங்களை கொண்டநிலையில் என் றப்புக்கு மத்தியில் விட்டுவிடுங்கள்.

(மிர்காத் ஷரஹ் மிஷ்காத் பாகம் 3 பக்கம் 638)

(8) ஹஸ்ரத் முஆவியா ؓ அவர்கள் அருள் ஜோதி அவர்களின் பழமையடைந்த போர்வையை இருபதாயிரம் திர்கத்திற்கு பெற்றுக் கொண்டார்கள். அதே போர்வை அவர்களின் கபன்பிடவையானது

(சீறத் ரசூல் அன்னபி)

எனவே நாம் மேற்கூறிய விடயங்கள் மூலமாக படிப்பினை பெறுவதுயாதெனில், நட்சத்திரங்களான அந்த நபித் தோழர்கள்

இப்படியான விடங்களை தம் வாழ்க்கையில் புரிந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது. இதில் எந்த ஓர் ஸஹாபியும் கருத்து வேறுபாடுகானவில்லை. இப்படியிருக்கையில் இன்றைய மடையர்கள் மேற்கூறிய ஸஹாபாக்கள் புரிந்த செயல்களை நாம் இன்று புரிவதை காணும் போது அதை ஹராம், ஷிர்க், அவ்விதமாகப் புரியும் உண்மை யான இஸ்லாமிய சகோதரர்களை முஷ்ரிக்,பித்அத்தி என்றெல்லாம் பத்வா எனும் மார்கத்தீர்ப்பு வழங்குகின்றனர். இவ்விடயத்தை விளக்கும் முகமாக ஷைகுல் இஸ்லாம் அல்லாமா கமருத்தீன் சியால்வி அவர்களால் கோர்வை செய்யப்பட்ட

تنوير الابصار في تقبيل المزار

தன்வீருல் அப்ஸார் பீ தக்பீலில் மஸார் எனும் அரபு மொழி நூலை அடியான் உண்மை எதுவென அறிய ஆவல் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களின் நலன் கருதி தமிழ் மூலம் மொழி பெயர்த்துள்ளேன். அடியானின் இச்சிறு பணியை ஏற்று அடியானின் வழிப்பயணத்தின் மறுமையின் கட்டிச்சாதகமாக ஆக்கிவைப்பானாக!

بجاه طه صلى الله عليه وسلم

அடியான்

**சையிது அப்துல்**
**அஸீஸ் குஷ்ஹாவி**



بسم الله الرحمن الرحيم

لك الحمد يا الله والصلاة والسلام عليك

يارسول الله ﷺ

சர்வ புகழும் புகழ்ச்சியும் எல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலாவுக்கே உரித்தாகும். எமது பார்வைகள் அவனைச் சூழ்ந்துகொள்வதை விட்டும் தூய்மையானவன். எனினும் அவன் சகலவற்றையும் சூழ்ந்துள்ளான். மேலும் அவனது அந்தரங்க விடயத்தில், மனித அறிவின் ஆழத்தைக் கொண்டு அடைந்துகொள்ளமுடியாது. அப்பரிசுத்த தாத்தாகின்றது, அதன் தனித் தன்மையில் அவனுடைய தகுதிக்கு எவனையும் தேவையற்றவனாவான். அவன் தன் காரியத்தில் தனித்துவத்தைக் கொண்டுள்ளவன். இந்த உயர்ந்த அந்தஸ்தைக்கொண்ட இறைவன் தனக்கு மனைவி, மக்களை உண்டாக்கிக் கொள்ளவில்லை, இவனே அர்ஷையும், பூமியையும், இவைகளுக்கிடையே உள்ள எல்லாவற்றையும் படைத்தவனாவான். அவன் அன்றும் இன்றும் என்றும் நிலையானவன். இவ்வுலகு எப்போது தூள்தூளாக அழிக்கப்படுமோ அப்போதும் அவன் அழிவற்றவனாக, நிலையானவனாக இருப்பான். இவனே ஆரம்பமானவனும் இறுதியானவனும் வெளியானவனும் உள்ளானவனும் ஆகும். இவனது தாத்தோ பரிசுத்தமானது. இவனே யாவற்றையும் அறிந்தவனுமாகும்.

எண்ணிலடங்கச் ஸலவாத் எனும் கருணையும் ஸலாம் எனும் சாந்தியும் மனித குலத்திற்குத் தலைவராய் வந்துதித்த, நபிமார்களின் இமாமாகிய, உயர்ந்த மேன்மையைப் பெற்ற,பாவிகளுக்காகப் பரிந்துரையாடக்கூடிய, லிவாஹுல் ஹம்தென்னும் கொடியின் உரிமையுடையவராகிய ஹஸ்ரத் முஹம்மத் ﷺ அவர்களின் மீது உண்டாவதாக எப்பொழுது மிஃராஜ் இரவிலே தன் ரப்புடன் உரையாடும் விடயத்திலே எந்த அளவுக்கு நெருங்கினார்களோ வில்லின் நுனி நெருங்கியுள்ளதை விட மிகநெருங்கித் தனது அன்பாளனுடன், என்னென்ன உரையாடினார்களோ, அந்தச் சம்பாஷனை விடயத்திலும் ஸலாம் உண்டாவதாக. மேலும் எண்ணிலடங்காச் ஸலாம் அன்னவர்களின் பரிசுத்த குடும்பத்தார் பேரிலும் உண்டாவதாக. எவர்கள் பயபக்தியாளர்களுக்கு இமாமாகத் திகழ்ந்தார்களோ, அந்த பூரணச் சந்திரனைப்போன்ற பேரொளியாகிய வள்ளல் திரு நபி ﷺ அவர்களிடமிருந்து ஒளி பெற்று,

நட்சத்திரங்களாகத் திகழ்ந்த அருமைச் ஸஹாபாக்கள் மீதும், இவர்களைப் பின்பற்றி உயர்வு பெற்ற தாபிஈன்கள் பேரிலும், யாரையெல்லாம் அல்லாஹுத்த ஆலா படைப்பினங்களிலே சிறந்தோராக்கினானோ, அத்தகையோர் மீதும் ஸலாவாத்தும் ஸலாமும் உண்டாவதாக.

விளங்கிக் கொள்! இச்சிறு பிரசுரம் யாருக்குப் பிரயோசனம் அளிக்குமென்றால், எவன் நல்லுபதேசங்களைத் தேடக்கூடியவனாகஇருந்து, இவ்வுபதேசத்தைக் கேட்டுத் தாழ்ந்திருந்து அமல்புரிவானோ அவனே. மேலும் இது எல்லாவிதமான சந்தேகங்களிலிருந்தும் பிசகுதலிலிருந்தும் ஈடேற்றந் தரக்கூடியதாகும். இதனை இவ்வாறு விளங்கிக் கொள்ள! இது ஓர் உறுதியான, வசப்படுத்தப்பட்ட கோட்டையைப் போன்றதாகும். இப் பிரசுரம் அடியானின் ஒரு சிறிய முயற்சியின் பிரதி பலனாகும்.மேலும் அது என்னுடைய ரப்பின் கிருபையும் கடாட்சமும் உருதுணையாகும்.

இப்பிரசுரம் இந்த அடியானின் தெண்டிப்பையும் அந்தக் கிருபையுடையோனின் நல்லுதவியையும் சார்ந்ததேயாம். இப்பிரசுரத்திற்கு "தன்வீஹுர் அப்ஸார் பி தக்பீலில் மஸார்"கப்ருகளை முத்தமிடுவதன் மூலம் உள்ளங்களை ஒளி பெறச் செய்தல் எனப் பெயரிட்டேன். இதன் நோக்கமும் அதுவே. சில சகோதரர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே, இதனை வெளியிடும் நோக்கங் கொண்டேன். ஆனால் இவ்விடயம் சம்மந்தமாக இவ்வடியான் தகுதியற்றவனாவான். ஆயினும், அல்லாஹ்வின் தாத்துடைய பரக்கத்தின் பேரில் நம்பிக்கை வைத்தவனாகவும் அவனது சிறப்புமிகு ஹபீபாகிய ரஸூல் ﷺ அவர்களின் உயர் வசீலாவின் துணையினாலும் எழுது கோலின் முனையைத் தொடுகின்றேன். அல்லாஹ் தஆலா எனக்குப்போதுமானவனும் எல்லாக் காரியங்களையும் பரிபூரணப்படுத்தித்தருவோனுமாக இருக்கின்றான்.

அடியான் இப்பிரசுரத்தைச் சங்கைக்குரிய, மதிப்பில் உயர்ந்த சாதாத்களுக்கு உதாரணமாய் அமைந்த, சிறப்பின் சிகரமாகிய மௌலானா செய்யிது ஆலம் முஸ்தபா ஸாஹிப் இப்னு ஸாஹிபுஸ்ஸஜ்ஜாதா செய்யித் அஃலா ரசூல் அலிகான் சைத் மஜ்துகுமுல் குத்ஸிய்யா அவர்களின் முன் அன்பளிப்புச் செய்கிறேன். இவர்கள் வலிமார்களின் தலைவராகவும், அவர்களின் கிரீடமாகவும் திகழும் சுல்தான் ஹஸ்ரத் கவாஜா முயீனுத்தீன் ஜிஸ்தி رحمة الله عليه சன்ஜரி அஜ்மீரி அவர்களின் சஜ்ஜாதாவில் உள்ளவர்களாவார்கள். எப்பொழுது இவர்கள் வெளிரங்க உள்ரங்க - எல்லா வகையான அறிவுகளையும் கற்று, சிரசிலே இவ்வறிவுகளின் கிரீடத்தை அணிந்த பின், அல்லாஹ்தஆலா. இவர்களுடைய வாயிலை, விரிவாக்கி, இவர்களின் நிழலை எம்மீது என்றென்றும் படியச் செய்வானாக. ஆமீன்



அறிந்து-கொள்! அல்லாஹுத்தஆலா உனக்கு ஹிதாயத் எனும் நல்வழியில் நடக்க உதவிபுரிவானாக. மேலும், வழிகேடெனும் தல்தல் (சேற்றுச் சுளி) என்பதினின்றும் உன்னைப் பாதுகாப்பானாக! நன்றாக அறிந்து-கொள்! ஆடையின்றியும் பாதரட்சையின்றியும் அலைந்து ஆட்டு மந்தையை மேய்ப்போனாகிய உண்ண உணவில்லாதோர் ஒரு காலத்தில் உயர்ந்த மாளிகைகளை நிறுவுவோராகவும் ஒருவருடன் ஒருவன் போட்டியிடுவோராகவும் தம் வாழ்வைக் கழிப்பர். இவர்கள் யாரெனின், அறிவின்றி மார்க்கத் தீர்ப்பு அளிப்பவர்களாகவும் திரு நபி ﷺ அவர்களின் பரிசுத்த சுன்னத்தைப் "பித்அத்" எனக் கருதுவோராகவும் பித்அத்தைச் சுன்னத் என எண்ணங் கொள்வோராகவும் உள்ளவர்களே. இத்தகைய வழிகேடுகளிலிருந்து தம்மை யார் பாதுகாத்துக் கொள்கிறார்களோ, அவர்களை இவ்வழிகேடர்கள் "முஷ்ரிக்' எனக் கருதுகின்றனர். இவர்களிடத்தில் "ஷிர்க்" எனும் பொக்கிஷமே உள்ளது. இவ்வறிவிலிகளிடம் ஷிர்க்கைத் தவிர வேறு எதுவுமே கிடையாது. இவர்கள் யாரைத் தீர்மாணித்தார்களோ அவர்களை 'முஷ்ரிக்குகள்' என்றும் தம்மைச் சார்ந்தோரை 'முஸ்லிம்கள்' என்றும் சான்றிதழ் அளிப்போராகும். இவ்வறிவிலிகள் தம்மையே முழுமையான ஏகோத்துவத்தையுடையோர் எனக் கருதுகின்றனர். உண்மையில் இவர்கள் இவ்விடயத்தை அறிவதில் இயலாதவர்களாகவே (இருளிலேயே) இருக்கின்றனர். இந்தத் தத்துவத்தின் உண்மையை அறியக்கூடிய ஆற்றல் இவர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டதாகும். ஏனெனில், இவர்கள் இவ்வனைத்து விடயங்களுக்கும் எந்தவொரு ஆதாரமும் இல்லை எனக்கருதுவோரே. குறிப்பிட்ட விடயம் சிறப்பான சுன்னத்தாயினும் அல்லது சிறந்த நல்வழியாக இருப்பினும் சரியே. இவர்கள் ஆதாரபூர்வமான பல சுன்னத்தான காரியங்களையே "ஷிர்க்"எனக் கருதுகின்றனர். பல வெறுக்கத்தக்க காரியங்களில் "அமல்" செய்வது தமக்கு ஏற்றமான வழிகாட்டிகள் என இவர்கள் கருதுவர்.

لاحول ولاقوة الا با لله العلي العظيم

நிச்சயமாக அடியான் இவர்களின் செயற்களைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளேன். குர்ஆனையும், ஹதீதையும் அவற்றின் தாற்பரியங்களையும் அறியாத இந்த அறிவீனர்கள், எவ்வித அச்சமுமின்றி, "ஹலாலை ஹராம்" என்றும் " ஹராமை ஹலால்"என்றும் தீர்ப்பளித்து விடுகின்றனர். எந்த விடயம் இவ்வறிவிலிகளின் மழுங்கிப்போன புத்திக்குச் சரியாகப் புரிகின்றதோ, அதையே மார்க்கக் கோட்பாடென்றும் சரியான இஸ்லாம் என்றும் கருதி நம்புகின்றனர். தமது அறிவுக்கு எட்டாத, புரியாதவற்றைத் தன் சிற்றறிவின்படி "ஷிர்க்"

எனவும் "பித் அத்" எனவும் முடிவுகட்டிவிடுகின்றனர். இவர்களின் அறிவையும், புத்தியையும் கிணற்றுத் தவளைக்கே ஒப்பிடலாம். இவர்களின் உறுதியற்ற ஆதாரமற்ற கட்டுரைகளும் இன்பமற்ற பேச்சுக்களும் உண்மையிலேயே அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி வாழும் ஓர் அடியானின் தாகத்தைத் தீர்த்துவிடாது.

அடியார்களே! இத்தகைய வழி கேடர்களின் பக்கம் உங்கள் இதயங்களை ஓர் அணுவளவேனும் திருப்பி விடாதீர்கள். அவர்களின் பக்கம் திருப்பினால் நரகின் விறகாவதைத் தவிர வேறொன்றுமில்லை. இவர்களுடன் நட்புக் கொள்ளாதீர்கள். இவர்களின் சபையிலே அமராதீர்கள். ஏனெனில், இவர்களின் வெளிரங்கம் மிக அழகாகவும் உள்ரங்கம் மிகக் கெட்ட சுபாவங் கொண்டதாகவும் இருக்கின்றன. இவர்களின் முகஸ்துதிக்கான தொழுகையும் குர்ஆன் ஓதலும் தஸ்பீஹாத்துகளும் உன்னை ஏமாற்றிவிடக்கூடாது. ஏனெனின், இவர்கள் ஓதும் குர்ஆன் இவர்களின் தொண்டையின் கீழ் இறங்காது; இவர்களின் இதயங்களுக்கு இக்குர்ஆனைக் கொண்டு எந்தவொரு பலனும் கிட்டாது. மக்களை வழிகெடுக்கும் இந்த அநியாயக்காரருக்கு "ஹிதாயத்" எனும் பொக்கிஷம் எப்படிக் கிடைக்கும். இவர்களுக்குத் திரு நபி ﷺ அவர்களின் ரப்பினுடைய அச்சங்கூட இல்லையே. இவர்கள் சகல படைப்பினங்களிலும் அதி உயர்ந்தவர்களாகத் திகழும் எம் கண்மணியாம் ஈருலக இரட்சகர் திருநபி ﷺ அவர்களுடைய கண்ணியத்தையும் அந்தஸ்தையும் உயர்வையும் மாசுபடுத்தி, கீழ்த்தரமாகப் பேசுகின்றவர்களாக இருப்பர். இவர்களைப்பற்றி அல்லாஹ் தன் திருமறையிலே பின்வரும் வண்ணம் கூறுகின்றான்.

இந்த அறிவீனர்கள் தம் நாவால் தேவையற்ற, தன் புத்தியே ஏற்றுக்கொள்ளாத விடயங்களைக் கூறுகின்றனர். இது எவ்வளவு பெரிய வெளிரங்கமான பொய்யாகும். மிக விரைவிலே,இவர்களின் இட்டுக்கட்டுதலின் காரணத்தால், வானம் பிழந்துவிடும்; பூமி வெடித்துவிடும்; மலைகள், தூள் தூளாகச் சிதறிவிடும். ஏனென்றால் இந்த நாசக்காரர்கள் திருநபி ﷺ அவர்களின் பேரிற் தேவையற்ற, நூதனமான காரியங்களையெல்லாம் சேர்த்து வைத்துள்ளார்கள். இவைகள் ஒருபோதும் திருநபி ﷺ அவர்களுடைய உயர்வான தகுதிக்கு ஒருபோதும் பொருத்தமாகாது. எவர்கள் நட்சத்திரங்களை விடச்சீரான வழியைக்காட்டுபவரும், பூரண சந்திரனை விடப் பிரகாசமான வருமான திருநபி ﷺ அவர்களின் பரிசுத்தத்தையும், உயர் நற்குணங்களையும் ஒருபோதும் ஒருவராலும் மறுத்துவிட முடியாது. இவர்களின் நற்குண, நல்லொழுக்கங்களை, இவர்களைப் படைத்த அல்லாமுல்குயூப் ஆகிய



இரட்சகனே. பாராட்டிப் புகழ்ந்திருக்கையில், யார்தான் மறுக்க முடியும். ஆகையால், திரு நபி ﷺ அவர்களின் புகழ்மாலையைக் காது தாழ்த்தி, அவன் வாயிலாகவே கேளுங்கள். திரு நபி ﷺ அவர்களின் கண்ணியமான புகழாரத்தைக் குறைப்பதிலேயே தம் வாழ் நாளைக் கடத்துகின்றார்களே, அவர்கட்கு அல்லாஹ்வின் கொடூரமான தண்டனையே கிடைக்கும்.

இத்தகையோரின் கொள்கை சந்தேகமின்றி, பட்டப்பகலின் சூரிய வெளிச்சத்தைப் போன்று யாவரும் அறிந்த உண்மையே. இக்கூட்டத்தினர் அரபு நாட்டின் நஜ்த் மாகாணத்திலிருந்து வெளியானவர்களே, இந்த நஜ்தியரைப் பற்றி நபிகளார் கோமான் ﷺ அவர்கள் கூறிய ஒரு ஹதீத் "மிஷ்காத்" எனும் ஹதீத்கிரந்தத்தில் வருகின்றது. இது பிரபல்யமிக்க "புகாரி" ஷரீபிலே பாபு திக்ர் அல்யமனி வஷ்ஷாம் . எனும் பாடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது,

وعن ابن عمررضي الله عنهما قال قال رسول الله
صلى الله عليه وسلم اللهم بارك لنا في شامنااللهم
بارك لنا في يمننا. قالوا يارسول الله وفي نجدناقال
اللهم بارك لنا في شامنا اللهم بارك لنا في يمنناقالوا
يارسول الله وفي نجدنا فاظنه قال في الثالثةهناك
الزلازل والفتن وبها يطلع قرن الشيطان( بخاري
شريف باب ذكراليمن والشام)

அப்துல்லாஹ் பின் உமர் رضي الله عنه அறிவிக்கின்றார்கள், 'ஒரு தினம் திருநபி ﷺ அவர்கள் கருணைக் கடல் பொங்கி வழிந்த சமயம், தனது திருக்கரங்களை உயர்த்தியவர்களாக தன் ரப்பிடம் துஆக்கேட்டார்கள். எனது ரப்பே! எமது ஷாம் தேசத்தின் மீது உனது பரக்கத்தை (கருணையை)ச் சொரிந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! எமது யமன் நாட்டின் மீது பரக்கத்தை (கருணையை)ச் சொரிந்தருள்வாயாக! அப்பொழுது நஜ்த் தேசத்தவரான ஸஹாபாக்கள், யாரஸுலுல்லாஹ் ﷺ எங்கள் நஜ்த் தேசத்திற்கும் துஆச் செய்யுங்கள் என வேண்டிக்கொண்டனர். அப்பொழுது மௌனம் சாதித்திருந்த திருநபி ﷺ

அவர்கள், பின்னரும் இரண்டாம் முறையாக, "யா! அல்லாஹ் எங்கள் ஷாம் தேசத்திற்கும் யமன் நாட்டிற்கும் பரக்கத் (கருணை) செய்வாயாக" என இரு கரங்களையுமேந்தி வேண்டினார்கள். இரண்டாம் முறையாகவும் நஜ்தைச் சேர்ந்த தோழர்கள், "எங்கள் நஜ்த்தேசத்துக்கும்" எனக் கூறினார்கள். மூன்றாம் தடவையில், திரு நபி ﷺ கூறினார்கள், நான் என்னுகின்றேன் "அங்கே குழப்பங்களும் பூகம்பமும் ஏற்படும். அங்கேயே சைத்தானுடைய கொம்பும் முளைக்கும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள். (புகாரி ஷரீப்)

இந்த ஹதீதிலிருந்து, தெளிவாகிறது. இக்கூட்டத்தார் மீது ஓர் அணுவளவாவது அல்லாஹ்வின் நல்லருள் இல்லை என்பது அப்படி இருக்குமாயின் ஏன் தனதருமைத் தோழர்கள் வேண்டிய போதும். ஈருலகத்திற்கும் ரஹ்மத்தாக (கருணைக் கடலாக) வந்துதித்த திரு நபி ﷺ அவர்கள் பிரார்த்திக்கவில்லை. இதனாலேயே திருநபி ﷺ அவர்கள் துஆப் பிரார்த்திக்காது மௌனம் சாதித்தார்கள். இத்தகைய துரதிஸ்ட முள்ளவர்களைப் பற்றித் தன் திருமறையிலும் அல்லாஹ் கூறாது விட்டு விடவில்லை. திருமறையிலே,

وان تستغفرلهم سبعين مرة فلن يغفرا الله لهم

நபியே, அக்கூட்டத்தாருக்காக நீங்கள் எழுபது தடவைகள் பாவமன்னிப்பும் கோரினாலும், அல்லாஹ் அவர்களை ஒருபோதும் மன்னிக்கவே மாட்டான்.

ஆயினும் நற்குணங்களின் ஆடைகளிலிருந்து சிறந்த ஆடைகளை அணிந்த எம்பெருமானார் ﷺ அவர்கள் எழுபத்தொரு விடுத்தங்களேனும் வேண்டியிருக்கலாமே. இவர்களுக்காகப் பரிந்து பிரார்த்திருக்கலாமே. அப்படியாயிருந்தும், ஏன் மௌனம் சாதித்திருந்தார்கள்? இப்படியிருக்க, இந்த வழி தவறிய கூட்டத்தினர் எந்த முகத்தோடு தம்மை "ஏகத்துவத்தை"ப் பின்பற்றுவோர் எனக் கூறுவர். உண்மையில் இவர்கள் ஏகத்துவவாதிகளாக இருப்பின், நிச்சயமாக திரு நபி ﷺ அவர்களின் துஆவிலே பங்கு கிடைத்திருக்கும். ஏனெனின், திரு நபி ﷺ அவர்கள் எல்லாவிதமான நற் கிருபைகளுக்கும் (கைர் வ பரக்கத்) நள்ளருட்களுக்கும் ஊற்றாய் இருக்கிறார்கள்.

நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள்! இவர்களின் ஏகத்துவம் இப்லீசுடைய ஏகத்துவமாகும். சிலவேளைகளில் இவ்வறிவிலிகள் அல்லாஹ் தஆலாவின் மிக நேசத்துக்குரித்தான முஹம்மத் ﷺ விடயங்களை அறியும்



அறாறலையே அதாவது இல்முல் கைபையேநிராகரித்து விடுகின்றனர். [1] ... எந்த நபிக்கு ஆதிமுதல் அந்தம் வரை தேவையான எல்லா ஞானங்களையும் அல்லாஹ்சுப்ஹானவுத்த ஆலா அளித்துள்ளான் என்ற விடயத்தில் எந்தவொரு சந்தேகமுமில்லை. வானம், பூமி, அவற்றிலும் அவைகளுக்கிடையிலும் முள்ளவைகள், மறுமை நாள், சுவர்க்கம், நரகம், ஆதிமனிதன் முதல் இறுதி மனிதன் வரை யாவற்றையும் அறிந்தவர்கள் என்பது, பகலின் சூரிய ஒளியின் வெளிச்சத்தை ஒரு குருடன் அதன் சூட்டைக் கொண்டு அறிந்து கொள்வானே அதை விடவும் தெட்டத் தெளிவானது. திரு நபி ﷺ அவர்களின் அறிவு என்பது எவ்வித சந்தேகமுமற்றதாகும். இது அவர்களின் ரப்பினால் கொடுக்கப்பட்ட மாபெரும் கொடைகளில் ஒன்றாகும். இதனை விளக்கும் வண்ணமே, அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்.

وماهو على الغيب بضنين

என்னுடைய நபி ﷺ மறைவான விடயங்களை எத்திவைப்பதில் உலோபியானவரல்ல.

இத்தகைய எத்தனையோ பல நன்கொர்டைகளை அவன் தனது ஹபீபாகிய - தோழரான, அன்பிற்கே உரித்தான எமதருமை நபி ﷺ அவர்களுக்கு அள்ளி அள்ளி அருளியுள்ளான். நாம் இவற்றை எண்ணிக் கணக்கிட முடியாது. நம்மால் இவற்றை விபரித்துக் கூறவும் முடியாது.

---

குறிப்பு: (1) இதற்கு ஆதாரமாக நீ இதைக்கொண்டே போதுமாக்கிக் கொள்வாய் என மேல் எண்ணம் கொண்டவனாய் ஒரு ஹதீதை மட்டும் எடுத்துக் காட்டுகின்றேன். நீதித்துவம் உள்ளவனாயிருப்பின் இது உன் வாழ்நாள் முழுவதற்கும்போதும்.

قام فينا رسول صلى الله عليه وسلم مقاما

فاخبرنا عن بدأ الخلق حتى دخل اهل الجنة

منازلهم واهل النارمنازلهم حفظ ذالك من

حفظه ونسي من نسيه

புகாரி – நூல் – பத்உல் கல்க் ; மிஷ்காத் – பாபு பத்யில் கல்க் வதிக்ரி அன்பியாஃவில் ஹஸ்ரத் உமர்பாரூக் ரலி அவர்கள் அறிவிப்பதாகக் கூறப்பட்டுள்ளது, 'ஒரு முறை திரு நபி ﷺ அவர்கள் எங்கள் மத்தியில் எழுந்து நின்று படைப்பின் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை அறிவித்தார்கள். சுவர்க்கமுடையோர் அவர்களின் வலமும் நகரில் நுழைவோர் அவர்களின் இடமும் நுழையும் வரை எடுத்துக் கூறினார்கள். இதனை ஞாபகமிட்டோர் ஞாபகஞ் செய்தனர்; மறந்தோர் மறந்து விட்டனர்.

மடமை நிறைந்த இத்தகையோர் - தம் சொல்லிலும் செயலிலும் உறுதியற்றவர்கள் - ஈருலக இரட்சகரான, நபிமாரின் தலைவராக வந்துதித்த எம்கோமான் நபி ﷺ அவர்களுக்குத் தம்மையே சரிசமமாகக் காண்பிக்கின்றனர். நபிகள் நாதர் ﷺ அவர்களோ எவ்வேளையிலும் நபித்துவத்தையுடையவர்களாகவே இருந்தார்கள். ஆதிபிதா ஆதம் ﷺ அவர்களின் வுஜூத் மண்ணினாற் படைக்கப்படும் வேளையும் அதற்கு முன்னரும் நுபுவத் என்னும் சிம்மாசனத்தில் அமர்ந்தவர்களாகவே இருந்தார்கள். நபி ஆதம் ﷺ அவர்கள் றூஹூக்கும் உடலுக்கும் இடையிலே இருந்த வேளையிலுமே நபித்துவத்தைப் பெற்றிருந்த கண்மணி நாயகம் ﷺ அவர்களையும் தன்னையும் ஒப்பிட்டுக் காட்டுவது எந்த அளவு கீழ்தரமான செயலாகும்.(2)

ஆனால் அண்ணலாரின் உயர்வும் கண்ணியமும் அல்லாஹ்வின் புறத்தில் எந்தளவு என்பதை மனிதர்களாற் கணிக்கவே முடியாது. அப்படி இருக்க, தன்னையும் அந்த ஈருலக இரட்சகரையும் ஒரு தன்மையாகச் சரிசம் காண்பது அறியாமையிலும் அறியாமையாகும்.

سبحان ا لله ماجمله وماحسنه وماكمله

---

குறிப்பு: (1)ன் தொடர்ச்சி

இதில் இருவிதமாக அறிவித்தார்கள்,

(*i*) இந்த உலகம் எவ்வாறு ஆரம்பமானது என்பதையும், எந்த நிலையில் முடிவுறும்என்பதையும் கூறினார்கள்.

(*ii*) உலக ஆரம்பத்திலிருந்து, கியாம நாள்வரை நடந்த, நடக்கப்போகும் முழு அம்சங்களையும் ஒவ்வொன்றாகத் தெறிவித்தார்கள். (மிஷ்காத் – பாபுல் முஃஜிஸாத்.)

فاجبرنابما هو كائن الى يوم القيمة فاعلمنا احفظنا

கியாம நாள்வரை நடக்கவிருக்கும் அனைத்து நிகழ்ச்சிகளையும் எங்களுக்கு அறிவித்தார்கள். எனவே அதை நாம் அறிவோம். அதை மனனம் செய்துகொண்டோம்.

குறிப்பு: (2)

திருநபி ﷺ அவர்கள் தன் வாழ்நாளில் ஒருநாள் நோன்பும், மறுநாள் நோன்பின்றியும் இருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற ஸஹாபா கண்மணிகள் தாமும் அவ்வாறு செய்ய முற்பட்டார்கள். நோன்பிருந்த தோழர்களை விழித்துத்திரு நபி ﷺ பின்வருமாறு கூறினார்கள்.

انالست مثلكم وا لله يطعمني وهويسقيني

"நான் உங்களைப் போன்ற வனல்ல," திரு நபி ﷺ அவர்களுக்குப் பின்னர் பதவியால், அந்தஸ்தால் உயர்ந்த ஸஹாபாக்களே, அந்தமகானுக்கு ஒப்பாக முடியாதென்றால், இப்போதுள்ள முட்டாள்கள் அக்கோமானை நோக்கி, "அவர் நம்மைப் போன்றவர்" என நாகூசாது கூறுகிறார்களே! இவர்களுக்கு எத்தகைய லஃனத் (கேடு), இறைசாபம் கிடைக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்த்துப் படிப்பினை பெறுங்கள்.



சில வேளைகளில் இவர்கள் படைப்பினங்களிலே அர்ஷையும் விட உயர்ந்த திருநபி ﷺ அவர்களுடைய திரு ரௌழா ஷரீபைத் தரிசிப்பதையும், அவ்விடங்களை முத்தமிடுவதையும் தடுக்கின்றனர். எதுவரையிலும் வானத்திலிருந்து மழை பெய்து கொண்டிருக்குமோ, மேலும் பூமியிலிருந்து புற்பூண்டுகள் முளைத்துக்கொண்டிருக்குமோ, அது வரையிலும் அவர்களின் பரிசுத்த ரௌழா ஷரீபின் பேரில் ஸலாத், ஸலாம் என்னும் வடிவில் அல்லாஹ்வின் "ரஹ்மத்" எனும் மழை சொரிந்து கொண்டே இருக்கும். இப்பரிசுத்தத் தன்மையைக்கொண்ட ஈருலக இரட்சகரின் புகழ்மாலையைக் கூறும்போது, வல்லல அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

وتعزروه وتوقروه

"ஈமான் கொண்ட விசுவாசிகலே! நீங்கள் எனது பிரியத்திற்குரிய நேசருக்குக் கண்ணியங்கொடுத்து, நிறைந்த மனதோடு சங்கை செய்யுங்கள்".

இந்த வாக்கியத்திலிருந்து, அல்லாஹூத்தஆலா திரு நபி ﷺ அவர்களைக் கண்ணியப்படுத்திச் சங்கை புரியுங்களென்று, அடியார்கள் மீது கட்டளையிடுகின்றான் என்பது புரிய வருகின்றது. எவ்வாறு கண்ணியப்படுத்த வேண்டுமென ஒரு முறை இங்கே குறிப்பிடப்படவில்லை. எனவே, எத்தகைய முறைகளிலெல்லாம் திரு நபி ﷺ அவர்களுக்குக் கண்ணியம் செலுத்த முடியுமோ அத்தகைய வழிகளிலெல்லாம் கண்ணியங் கொடுத்துச் சங்கை புரிவது ஏற்றமாகும். அவர்கள் பருகிய பானங்களையோ, அணிந்த ஆடைகளையோ, அவர்களின் திரு ரௌழா ஷரீபையோ, அமர்ந்தமின்பரையோ முத்தமிடுவது சந்தேகமின்றி அனுமதிக்கப் பட்டவைகளாகும்.

(1) ஹதீது ஷரீபில் வருகின்றது, உர்பா பின் மஸ்ஊத் رضي الله عنه அவர்கள் முஸ்லிமாகாத காலத்தில், ஹூதைபியா உடன்படிக்கை நேரத்திலே, திரு நபி ﷺ அவர்களுடன் இணக்க உடன்படிக்கைப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்கள். அங்கே திரு நபி ﷺ அவர்களுக்கு ஸஹாபாக்கள் செய்த மரியாதையை அவர்கள் பார்த்தார்கள். பின்னர் மக்கா சென்று, குறைஷிக் காபிர்களுக்குத் தான் கண்டவற்றைப் பின்வருமாறு விவரிக்கின்றார்கள்.

وا لله لقدوفدت على الملوك وفدت على قيصرو كسرى والنجاشي
وا لله ان رأيت ملكا قط يعظمه اصحابه مايعظم اصحاب
محمدصلى ا لله عليه وسلم محمدا صلى ا لله
عليه وسلم وا لله ان تنخم نخامة الاوقعت

في كف رجل منهم فدلك بها وجهه وجلده

واذاامرهم ابتدرواامره واذاتوضأ كادوايقتتلون

على وضوئه واذاتكلم خفضوااصواتهم عنده و

مايحدون اليه النظر تعظيما له

அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் மன்னர்களின் சபைக்கும், கைசர், கிஸ்ரா, நஜ்ஜாஷி ஆகியோரின் சபைகளுக்கும் விருந்தாளியாக, சமூகங் கொடுத்திருக்கிறேன். ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக, எந்த மன்னனையும் அவரின் தோழர்கள், முஹம்மத் ﷺ அவர்களின் தோழர்கள் மரியாதை செய்கின்றதுபோல், மரியாதை செய்யக்காணவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக, அவர் காறி உமிழ்வாரெனில், அந்தச்சளி அத்தோழர்களில் ஒருவரின் கையிலே விழுந்ததேயன்றிக்கீழே விழாது. அதனை அவர் தனது முகம், உடம்பு என்பவற்றின் மீது தேய்த்துக் கொள்வார். மேலும் அவர் எதற்காவது 'ஹ ூக்ம்' கட்டளையிடுவாராயின், உடனே அவ்விடயம் 'அமலில்' கொண்டுவரப் பட்டேயொழிய வேறில்லை. அவர் 'வுழு'ச் செய்வாரென்றால், வுழுச்செய்யும் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக, ஒருவர் ஒருவரைமுட்டிமோதித் தம் உயிரையே தியாகஞ் செய்து கொள்கிறார்கள்.அவரின் திருச் சபையிலே பேசுவார்களாயின், மிகத் தாழ்ந்த சப்தத்தோடு, அமைதியாக உரையாடுகிறார்கள். அவரைக்கண்ணியப்படுத்துமுகமாக, அத்தோழர்கள், தம் பார்வையைத்தாழ்த்தியே அன்றி உற்றுநோக்கிப் பார்க்க மாட்டார்கள்.

(புகாரி ஷரீப் - பாகம்1-பக்கம் 379)

رأيت رسول الله صلى الله عليه وسلم بمكة وهوبالاطبح في

قبة حمراء من ادم ورأيت بلالا رضي الله عنه أخذوضوء

رسول الله صلى الله عليه وسلم ورأيت الناس يبتدرون ذلك

الوضوء فمن اصاب منه تمسح به ومن لم يصب منه أخذ من

بلل يدصاحبه

(2) புகாரி ஷரிப், முஸ்லிம் ஷரீப் ஆகியவற்றில், ஹஸ்ரத் அபூஜுஹைபா ؓ அவறிவிப்பதாக ஒரு ஹதீத் கூறப்பட்டுள்ளது. அவர்கள் கூறினார்கள், "நான் திரு நபி ﷺ அவர்களை மக்காமுகர்ரமாவில், அப்தஹ்



என்னுமிடத்தில் பச்சை நிறமான ஒருகூடாரத்திற் கண்டேன். அங்கே செய்யித் பிலால் ؓ அவர் களையும் கண்டேன். அவர் திரு நபி ﷺ அவர்கள் வுழுச்செ தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்தார். அத்தண்ணீரின் பக்கம் ஏனை தோழர்களும் விரைந்து செல்வதைக் கண்டேன். அந்த நீர் யாருக்கு கிடைத்ததோ அவர் அதைத் தன் முகத்திற் பூசிக்கொள்வோராக இருப்பதையு நீர் கிடைக்காதவர் அதுகிடைத்த தோழரின் ஈரத்தைத் தொட்டுத் தன் முகத் தேய்த்து பூசிக்கொள்வோராக இருப்பதையும் கண்டேன்"

(புகாரி, முஸ்லிம் - மிஷ்காத்-பக்கம் 7

ضرت قاضي عياض يقول من اعظامه واكرامه صلى الله عليه وسلم

اعظام جميع اشيائه واكرام مشاهده وامكنته من مكة

والمدينة ومعاهده ومالمسه صلى الله عليه وسلم

(3) காழி இயாழ் ؓ கூறுகின்றார்கள், திரு நபி ﷺ அவர்களுக்குச்செய்யு கண்ணியம், மதிப்பு என்பன எவையெனின், எவைகளெல்லாம் அம்மகானவ களைச் சாருமோ அவைகளைக் கண்ணியப்படுத்துவதும்; மக்கா முகர்ரமா மதீனா முனவ்வறாஆகிய இடங்களில், அவர்கள் எந்த இடங்களுக் கெல்லா வருவோராகவும் - போவோராகவும் இருந்தார்களோ அவைகளை கண்ணியப்படுத்தி, மரியாதை செலுத்துவதும் ஆகும்.மேலும், எந்த இடங்களி அவர்கள் தரித்தார்களோ அந்த இடங்களுக்கும், எப்பொருள் மீது அவர்களி திருக்கரம் பட்டதோஅவற்றிற்கும், எவைகள் அவர்களால் அறிமுக படுத்தப்பட்டனவோ அவைகளுக்கும் மரியாதை, கண்ணியம் என்பன செலுத்தப்படல் அவசியமாகும்.

رؤي ابن عمررضي الله عنهما واضعا

يده على مقعدرسول صلي الله عليه وسلم

من المنبرثم وضعها على وجهه

(4) ஹஸ்ரத் இப்னு உமர் ؓ அவர்கள் தன்கையைத் திருநபி ﷺ அவர்கள் மின்பரில் எவ்விடத்தில் அமர்ந்திருந்தார்களோ அவ்விடத்தில் வைத்து தன் வதனத்தில் பூசிக்கொள்வோராயிருந்தார்.

மேலே கூறப்பட்ட அனைத்து விடயங்களும் ஓர் அறிவுள்ள புத்திசாலியின் மூளையில் இலகுவாகப் பதிந்துவிடும் விடயங்களாகும். கப்ரை முத்தமிடும் செயலைச் சுஜூதுக்குள்ள சட்டத்தோடுசேர்ப்பது பிழையாகும். ஏனெனின், ஒவ்வொரு தொழுகையிலும், (அவற்றின் ஒவ்வொரு ரக்அத்திலும்) இரண்டு விடுத்த வீதம் பூமியைமுத்தமிட்டால், அது சஜதா எனக் கணிக்கப்பட மாட்டாது.சஜதாவுக்குரிய சட்டம் யாதெனில், நெற்றியும் மூக்கின் நுனியும் இரு உள்ளங்கைகளும் இரு முழங்கால்களும் (குறைந்தது) கால்களின்பெரு விரல்களும் நிலத்தைத் தொட்டிருப்பது நிபந்தனையாகும். இதுவன்றி, தங்கடமில்லாதவனின், சுஜூத் சுஜூதாகாது இவ்விதமே ஹஜருல் அஸ்வத்கல்லை முத்தமிடுகின்றோம். இதைத் 'தக்பீல்'முத்தமிடுதல் எனப்படுமே யன்றி சுஜூத் எனப் பெயரிடப்படமாட்டாது. இதனை நன்கு புரிந்து கொள். அறிவிலிகளில் நீயும் ஒருவனாகி விடாதே! தற்போது உங்கள் முன் உறுதியானஆதாரங்களைக் கொண்ட ஹதீதின் விளக்கத்தோடு, பல்வேறு ஆதாரங்களையும் எடுத்துக் காட்டுகின்றேன். படித்துச் சிந்தனைசெய்து பார்!

(5) ஹஸ்ரத் அல்லாமா அய்னிؓ புகாரி ஷரீபின் விரிவுரையாகிய உம்ததுல் காரியில் நான்காம் பாகத்தில் 670 ஆம் பக்கத்தில், ஒரு விடயத்தை மிகச் சிறப்பாக விளக்குகையில் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

وقال ـ يعني شيخه زين الدين ـ أيضاً: وأخبرني الحافظ أبو سعيد ابن العلائي قال رأيت في كلام أحمد بن حنبل في جزء قديم عليه خط ابن ناصر وغيره من الحفّاظ أن الإمام أحمد سُئل عن تقبيل قبر النبي صلى الله تعالى عليه وسلم وتقبيل منبره فقال: لا بأس بذلك، قال فأريناه للشيخ تقي الدين بن تيمية فصار يتعجب من ذلك ويقول عجبت أحمد عندي جليل يقوله[1]؟ هذا كلامه أو معنى كلامه، وقال: وأيّ عجب في ذلك وقد روينا عن الإمام أحمد أنه غسل قميصاً للشافعي وشرب الماء الذي غسله به وإذا كان هذا تعظيمه لأهل العلم فكيف بمقادير الصحابة وكيف بآثار الأنبياء عليهم الصلاة والسلام.



புனித மிக்க இடங்களைப் பறக்கத்தை நாடி முத்தமிடுதல், இவ்வாறே நல்லோர்களின் கால்களையும் நாட்டங்கொண்டு முத்தமிடுதல் என்பன ஆகுமான காரியங்களே. இச் செயற்கள் (முஸ்தஹ்சன்) சிறப்பு மிக்கவை களாகும்..

وقد سأل ابوهريرة رضي الله عنه الحسن رضي الله عنه ان يكشف له المكان الذي قبله رسول صلى الله عليه وسلم وهو سرته فقبله تبركا باثاره وذريته صلى الله عليه وسلم

(6) ஒரு முறை ஹஸ்ரத் அபூ ஹுரைராؓ அவர்கள், திருநபி ﷺ அவர்களின் பேரராகிய இமாம் ஹஸன்ؓ அவர்களைச் சந்தித்து, 'உங்கள் மேனியில் திருநபி ﷺ அவர்கள் முத்தமிட்ட புனிதமான தானத்தை எனக்குக் காட்டுவீர்களாக' என்றுவேண்டிக் கொண்டார்கள் அப்போது இமாமவர்கள், தனது மேலங்கியை அகற்றித் தனது தொப்பிழைக் காட்டினார்கள். அபூஹுரைறாؓ அவர்கள் பறக்கத்தை நாடி அவ்விடத்தை முத்தமிட்டார்கள்.

(7) ஹஸ்ரத் தாபித் அல்புனானிؓ அவர்கள் தாபி ஈன்களில் ஒருவராவார். இவர்கள் காதிமுர் ரசூல்ﷺ திருநபிகளாரின் பணியாளராகிய ஹஸ்ரத் அனஸ்ؓ அவர்களின் கரங்களைப் பிடித்தால், சற்று நேரம் அவற்றை விட்டுவிடாது பற்றிப் பிடித்தவர்களாகவே இருப்பார்கள். இக்கரங்கள், திருநபிﷺ அவர்களின் சிறப்பு மிகு அருள்பெற்ற மேனியைத் தொட்டதல்லவா எனக் கூறிக் கொள்வார்கள்.

ஈமானுடையயோரைக் குதூகலமாக்கும் சம்பவம்

قال فأريناه للشيخ تقي الدين بن تيمية فصار يتعجب من ذلك ويقول عجبت أحمد عندي جليل يقوله(١)؟ هذا كلامه أو معنى كلامه، وقال: وأي عجب في ذلك وقد روينا عن الإمام أحمد أنه غسل قميصاً للشافعي وشرب الماء الذي غسله به وإذا كان هذا تعظيمه لأهل العلم فكيف بمقادير الصحابة وكيف بآثار الأنبياء عليهم الصلاة والسلام.

(1) அல்லாமா ஜனி رضي الله عنه அவர்கள், தன்னிடத்திலே ஹாபிஸ் அபூசயீத் அல்-அலாயி رضي الله عنه அவர்கள் கூறியதாகப் பின்வருமாறு எடுத்தியம்பியுள்ளார்கள். அதாவது, ஹஸ்ரத் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் رضي الله عنه அவர்களின் ஒரு பழைய நூல் என்னிடமிருந்தது. நானும் வேறும் சில ஹதீதுகளை மனனமிடும் ஹாப்பாஸ்களும் அந்த நூலின் விரிவுரையிலே எழுதியிருந்த சில செய்திகளை அவதானித்தோம். இமாம் அஹ்மத் பின் ஹன்பல் رضي الله عنه அவர்களிடத்திலே ஒரு வினா எழுப்பப்பட்டிருந்தது. அதாவது, திரு நபி ﷺ அவர்களுடைய புனிதமிக்க ரௌழா ஷரீபையும், அவர்கள் அமர்ந்திருந்து பிரசங்கஞ் செய்த மிம்பரையும் முத்தமிடுதல் கூடுமா? என்பதாக. அதற்கு இமாமவர்கள் ஆகும் என்றும், இதில் ஆட்சேபனையே இல்லை என்றும் கூறினார்கள். ஹாபிஸ் அபூசயீத் அல்-அலாயி رضي الله عنه அவர்கள் அந்த நூலை எடுத்துச் சென்று, ஷெய்க் தக்யூத்தீன் பின் தைமியா அவர்களிடம் காட்டியபோது, அதனைக் கண்டு ஆட்சரியமடைந்தவராகப் பின் வருமாறு கூறினார். "நான் இமாமுடைய அறிவையும் கண்ணியத்தையும் ஏற்றவனாவேன்.ஆயினும் இமாமுடைய இந்த மார்க்கத் தீர்ப்பைக் கண்டு மிகத்திடுக்கமடைகின்றேன். காரணம் இவ்விடம் அல்லது இதனைஅறிவிக்கும் வார்த்தை இமாம் அவர்களுடையது என்பதற்கு என்னஉறுதி" என்றார்கள். இதனைச் செவியுற்ற ஹாபிஸ் அபூசயீத் رضي الله عنه அவர்கள், இதனை விடவும் ஆச்சரியமான ஒரு விடயத்தைக் கூறினார்கள். எங்கள் முன் இமாம் அவர்களுடைய ஒரு சம்பவம்அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஓர் முறை இமாம் அஹ்மத் பின் ஹன்பல் رضي الله عنه அவர்களின் குருநாதராகிய ஹஸ்ரத் இமா ஷாயிஈ அவர்களின் மேலங்கி "கமீஸ்" அவர்கள் முன் கொண்டு வரப்பட்டது. அப்போது இமாம் அவர்கள் அதைக்கழுவி பறக்கத்திற்காக அந்நீரைப் பருகினார்கள். இதனைத் கூறிய நான், இமாமவர்களின் முன்னிலையில் ஞானவான்களின் கண்ணியம் இவ்விதமிருக்குமாயின், அதைவிட உயர்ந்த ஸஹா பாக்கள், அதினும் அதி உயர்ந்த நபிமார்கள்



முதலியோரின் அந்தஸ்தும் கண்ணியமும் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதைக் கவனியுங்கள் என எடுத்தியம்பினேன்.

(உமத்துல் காரி ஷரஹ் புகாரி, பாகம் 4 பக்கம் 670)

இதற்கு ஓர் அத்தாட்சியாக, மஜ்னூன் தன் காதலியான லைலா வசிக்கும் நகருக்குச் சென்றால் யாது செய்வதாகக் கூறுகின்றான் என்பதையும் கவனித்தல் பொருத்தமாகும்.

امرعلى الديار ديارليلي ** اقبل ذاالجداروذاالجدار

وماحب الديارشغف قلبي** ولكن حب من سكن الديار

எப்போது நான் என் காதலி லைலாவின் நகருக்குச் செல்கின்றேனோ! அப்போது, சில வேளை இச்சுவரையும் அச்சுவரையும் முத்தமிடுவோனாக இருப்பேன். இவ்வாறு முத்தமிடும் நோக்கம் அவள்மீது இருந்த பிழையான நோக்கத்துக்காக அல்ல. அவள் இந்த நகரில் வசித்திருந்ததற்காகவே.

(2) முஹம்மத் திப்ரி رضي الله عنه கூறுகிறார்கள்.

எப்போது ஹஜருல் அஸ்வதை முத்தமிடுவது கூடுமாகுமோ,இதனை ஆதாரமாகக் கொண்டு, முத்தமிடும் விடயத்தில் கூடும் என்பதற்காக ஆதாரம் காணலாம். ஏனெனில், எப்பொருளை முத்தமிடுவதன் காரணமாக அல்லாஹ்தஆலாவுடைய கண்ணியம் வெளியாகின்றதோ அப்பொருள்கள் யாவற்றையும் முத்தமிடுதல் எந்தவொரு ஆட்சேபனைக்கு முட்பட்டதல்ல.

முத்தமிடுதல் "முஸ்தஹப்" என்பதற்கு ஆதாரமாக ஒருரிவாயத்தேனும் கிடைக்கவில்லை என்பதும் சரியே. அப்படியிருந்தும் "மக்ரூஹ்" என்பதற்கும் எந்தவொரு ரிவாயத்தேனும் கிடைக்கவில்லையே.

(3) அல்லாமா ஐய்னி رضي الله عنه அவர்கள், கூறுகின்றார்கள். நான் எனது பாட்டனாராகிய ஹஸ்ரத் முஹம்மத் பின் அபூபக்ர் رضي الله عنه அவர்களின் கிதாப் (நூல்)களின் "ஹாஷ்யா"வில் ஒரு ரிவாயத்தைக் கண்டேன். அது இமாம் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் அபூசைப் அவர்கள் ரிவாயத் செய்துள் ளார்கள். அதாவது ஸஹாபாக்களிற் சிலர் குர்ஆனைக் கண்டால் முத்தமிடு பவர்களாக இருந்தார்கள்; நல்லடியார்களாகிய ஸாலிஹீன்களின் கபுர்களையும் முத்தமிடுபவர்களாகக் காணப்பட்டனர். அல்லாமா ஐய்னி கூறுகிறார்கள், ஸஹாபாப் பெருமக்கள் மத்தியில் இச் செயலைப் புரிவது ஒரு நூதனமானதல்ல. ஆகவே, இச் ஸஹாபாக்களை பின்பற்றியவாறு எமக்கும் இக்காரியம் செய்யக்கூடியதாகும், எத்தகைய காரியங்களிலே அல்லாஹ்வின் கண்ணியம் மறைந்திருக்கின்றதோ அதை அவனே நன்கறிவான். ஹஜருல் அஸ்வத்

கல்லைப் போன்றும், அது போன்ற எனையவற்றிலும் எனலாம்.

(4) இமாம் ஷாபிஈ ؒ அவர்களின் குருநாதராகிய இமாமுல் முஹத்திதீன் ஹஸ்ரத் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் ஹன்பல் அஷ்ஷைபானி ؒ அவர்கள் தன் கிரந்தமாகிய "முஸ்னதில்" பின்வருமாறு கூறுகிறார்கள். எங்கள் மத்தியில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் இச்சம்பவத்தை அறிவித்தார்கள். அவர்களுக்கு அன்னாரின் தந்தையாரும், அவர்களுக்கு அப்துல் மலிக்பின் அஹ்மத் என்பவரும், அன்னவருக்கு ஹஸ்ரத் தாவூத் பின் சாலிஹ் ؓ அவர்களும் ரிவாயத் செய்துள்ளார்கள். அதாவது, ஒரு முறை உமையாக் கலிபாவாக இருந்த மர்வான், திருநபி ﷺ அவர்களுடைய திரு ரௌழா ஷரீபுக்கு வருகை தந்த சமயம், ஒருவர் திருநபி ﷺ அவர்களின் திரு ரௌழா ஷரீபில், தன்முகத்தை வைத்துத் தேய்த்துக் கொண்டிருக்க கண்ணுற்றார். இதை பார்வையிட்ட மர்வான் அம்மனிதரை நோக்கி நீர் செய்யும் காரியம் என்ன ஆச்சரியமாய் கேட்டார். அம்மனிதரோ. திருநபி ﷺ அவர்களுக்கு விருந்துபசரித்த பிரபல்யமான ஸஹாபாக்களில் ஒரவரான ஹஸ்ரத் அபூ அய்யூபுல் அன்ஷாரி ؓ அவர்களாகும். கலிபாவை நோக்கிய அன்னவர்கள், மர்வானே! நான் என்ன செய்கின்றேன் என்பதை நன்கறிந்தவன். அல்லாஹ்வின் திருத் தூதரின்சபைக்கு சமூகங் கொடுத்துள்ளேன். நான் உயிரற்ற ஒரு கருங்கல்லிடம் வரவில்லை. இதை நன்றாகச் செவி சாய்த்துக்கேட்டுக்கொள். திரு நபி அவர்கள் பின்வருமாறு கூறியதைக்கேட்டேன்."

سمعت رسول الله صلى الله عليه وسلم

يقول لاتبكواعلى الدين اذاوليه اهله ولكن

ابكواذاوليه غيراهله هذاخديث صحيح الاسناد

எப்போது உனது மார்க்கத்தை அமுல்படுத்துபவன் அதற்குத் தகுந்தவனாயிருப்பின் உனது மார்க்கத்தின் பேரில் அழாதே! ஆனால் உனது மார்க்கத்தை அமுல்படுத்துபவன் அதற்குத் தகுதியற்றவனாயிருப்பின், உனது மார்க்கம் இருக்கும் நிலையைக்கண்டு அழு. சரியான இஸ்னாத் கொண்டதாகும்.

(முஸ்தத்ரக் லில் ஹாகிம்.நான்காம் பாகம் - பக்கம் 515)

(5) ஹாபிஸ் அல் கபீர் இமாமுல் முஹத்திதீன் ஹஸ்ரத் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் அப்துல்லாஹ் ஹாகிம் நேஸாபூரி, தனது



பிரபல்யமான ஹதீத் கிரந்தமாகிய "முஸ்தத்ரகில்" - பாபுல்பிதன் எனும் பாடத்தில் பின் வருமாறு எழுதியுள்ளார்கள். எம்முன்னால் இந்த ஹதீதை அபூ ஆமிர் அபுல் அப்பாஸ் முஹம்மத்பின் யஃகூபு அவர்களும் இவர்களிடம் அப்பாஸ் பின் முஹம்மத் பின் காதிம் அத்தூரி அவர்களும், அவர்களுக்கு அபூ ஆமிர் அப்துல்மாலிக் பின் உமர் அவர்களும், அவர்களுக்கு கதீர் பின் ஸைத் அவர்களும். இந்த ஹதீதை "தாவூத் பின் அபூஸாலிஹைக்" கொண்டு ரிவாயத் செய்ததுள்ளார்கள். அதாவது, உமையாக் கலிபாவாகிய மர்வான் ஒருமுறை மதீனா முனவ்வறாவுக்கு வருகைத் தந்திருந்த வேளை, அங்கே ஒருவர் தன் முகத்தைத் திரு நபி ﷺ அவர்களின் புனிதமிகு ரௌழா ஷரீபில் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். இதனைக் கண்ட மர்வான் அம்மனிதரின் பிடரியைப் பிடித்து, வெறுப்புடன் உயர்ந்த சப்தத்தில், "நீர் என்ன செய்கின்றீர்" எனக் கேட்டார். அதற்கு அம்மனிதர், "ஆம், நான் அறிவேன்" என உள்ளச்சமின்றித் திடகாத்திரமாகப் பதிலுரைத்தார். அதைக் கண்டு, ஆச்சரியங்கொண்டவராக, அம்மனிதரின் முகத்தைப் பார்த்தபோது, அன்னவர்கள் மிகமேலான ஸஹாபாக்களில் ஒருவராகிய ஹஸ்ரத் அபூ அய்யூபுல் அன்ஸாரி ؓ என்பது தெரிய வந்தது. அவர்கள் மர்வானை நோக்கிப் பின்வருமாறு கூறினார்கள். 'மர்வானே, நான் என்ன செய்கின்றேன் என்பதை நன்கறிந்தவன் . நான் அல்லாஹ்வின் திருத்தூதர் ﷺ அவர்களின் திருச் சபைக்குச் சமுகங் கொடுத்துள்ளேன். நான் உயிரற்ற கருங்கல்லிடம் வரவில்லை. கவனமாகக்கேட்டுக்கொள். நான் திருநபி ﷺ அவர்கள் இவ்வாறு கூறுவதைத் கேட்டிருக்கின்றேன். "எப்போது உனது மார்க்கத்தை அமுல்படுத்துவோன் அதற்குத் தகுந்தவனாயிருப்பின் உனது மார்க்கத்தின் பேரில் அழாதே". ஆனால் உனது மார்க்கத்தை உமுல்படுத்துவோன் அதற்குத் தகுதியற்ற வனாயிருப்பின் உனது மார்க்கத்தின் நிலையைக் கண்டு அதற்காக அழு! எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

(முஸ்தத்ரக் அல்ஹாகிம்-பாகம் 4 - பக்கம் 515) "ஸஹீஹுல் இஸ்னாத்"

பார்த்தீர்களா! எவ்வளவு சிறப்பாக ரஸூல் ﷺ அவர்களுக்கு அளிக்கும் கண்ணியத்திற்கும் மக்காவில் வாழ்ந்த முஷ்ரிகீன்கள் வணங்கி வந்த கற்களுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகப் பிரித்துகாட்டி விளக்கியுள்ளார்கள். திருக்குர்ஆனிலே முஷ்ரிகீன்களைக்குறித்து இறக்கப்பட்ட அத்தியாயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு நபிகட்கரசரான செய்யிதுல் முர்சலீன் அவர்களுடைய கண்ணியத்துக்கும் சங்கைக்கும் ஊறு விளைக்கும் வண்ணம் ஒப்பிட்டுசமத்துவம் காண்பது ஆச்சரியத்திலும் ஆச்சிரியமே. எந்தவொருவழி கெட்டவனும் திருநபி ﷺ அவர்களைக் கண்ணியப்படுத்தும் விடயங்களில் ஒன்றையேனும் விக்ரக ஆராதனைக்குச் சமம் எனக் கணிப்பானாகில் அவன் ஒரு போதும் முஸ்லிமாக மாட்டான்.இஸ்லாத்தின்

கொள்கைகளைப் பின்பற்றுவோனுமாகமாட்டான். இத்தகைய ஒருவன் ஒருபோதும் முஸ்லிம்களின் தலைவனாகவும் இருக்க முடியாது. இத்தகைய ஒருவன் எப்போது முஸ்லிம்களுக்குத் தலைவனாகின்றானோ, அப்போது இஸ்லாத்தின் இழிநிலை கண்டு கண்ணீர் விடுவதைத் தவிர வேறொன்றுமே கிடையாது.

இன்றைய வழி கெட்ட கூட்டத்தார் அன்று திருநபி ﷺ அவர்களின் புனித சபையில் திருத்தோழர்கள் செய்த செயற்களுக்கு அவர்கள் கண்ணியங் கொடுத்த முறைகளுக்கு என்ன மார்க்கத் தீர்ப்பு-பத்வா-வழங்க முடியும். நிச்சயமாக அல்லாஹ்வின் மீது ஆணையாக அன்று மர்வான் அவர்கள் இருந்த இடத்தில், இன்றைய வழிகெட்ட கூட்டத்திலுமொருவன் இருந்திருப்பின் அந்த உத்தம ஸஹாபியாகிய அபூ அய்யூபுல் அன்சாரி அவர்களை நோக்கி "ஏ! முஷ்ரிகே, இணைவைப்பவனே!" என்ற இழி சொற்களாலேயே விழித்து அழைத்து "நீர் யாது செய்கின்றீர்?" என்றல்லவா கேட்டிருப்பான்.

نعوذ بالله ثم نعوذ بالله

நல்லறிவுடையோரே! சற்றுச் சிந்தித்துப்பார்துக் கூறுங்கள். திருநபி ﷺ அவர்களின் புனிதமான ஸஹாபாத் தோழர்களைப் பின்பற்றுவதன் மூலம் எவனாவது ஒருவன் முஷ்ரிக்காகி விடுவானா? திருநபி ﷺ அவர்கள் தனது அருமைத் தோழர்களின் உயர்வை எடுத்தியம்பும் போது "எனது தோழர்கள் வானில் தோன்றும் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களிலே எவரைப் பின்பற்றினாலும் நல்வழியடைவீர்கள்' இவ்விதம் கூறியிருக்கையிலே, எங்ஙனம் அந்தச் ஸஹாபாக்களின் முன்மாதிரியைப் பின்பற்றி எவனாவது திருநபி ﷺ அவர்களுக்குக் கண்ணியத்தையும் அந்தஸ்தையும் கௌரவத்தையும் அளித்து வருவானாகில், காபிராகி விடுவான். அல்லாஹ் போதுமானவனாகும். அவனேவழி காட்டியுமாகும்.

وآخردعوانا ان الحمد لله رب العالمين

❋ ❋ ❋



# நன்றியுரை

இன்று எத்திக்கில் பார்த்தாலும் குறிப்பாக பாகிஸ்தான், இந்தியா, பங்கலாதேஷ், இலங்கை போன்ற நாடுகளில் ஒவ்வோர் கூட்டுமும் தனித்தனி பெயர்களைச் சூட்டிக்கொண்டு இஸ்லாமியர்கள் தௌஹீதியர்கள் என்ற போர்வையில் உண்மையான முஸ்லீம் சகோதரர்களின் உள்ளங்களை கவரச் செய்து அவர் ண்டோராயினும் வஹ்ஹாபிகள் என்ற ஒரு பொதுப் பெயரிலேயே இடம் பெறுபவர்கள். இவர்கள் இஸ்லாம் ஆரம்பித்த முதல் உலகம் அழியும் வரை உண்மையான அகீதா கொள்கையை கொண்டவர்களான அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாவூ என்ற உண்மைத் தத்துவ கொள்கையை வெறுப் போராகவும், மறுப் போராகவும் இருப்பர்.

உண்மை தூங்கி, பொய் தலை நிமிர்ந்து ஊசலாடிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சிறுபான்மை முஸ்லீம்களை உள்ளடக்கிய இலங்கை யில் மேற்சொன்ன பொய்யர்களின் வாதாட்டங் களை எடுத்துக்காட்டி உண்மைத் தத்துவ கொள்



இஸ்லாத்திற்காக

உயிரை விடு...

ஆனால்

உயிருக்காக

இஸ்லாத்தை

விட்டு விடாதே..



ஷஃபிஹா...

# JMHAC - KALMUNAI

SRILANKA

Swjf786@gmail.com

www.jmhkalmunai.blogspot.com

www.kalmunaijmhac.weebly.com